பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 04 2026 WEDNESDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மேற்குவங்க முதற்கட்ட மற்றும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

2. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கான பங்களிப்பை அரசு ஊழியர்கள் வழங்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

3. தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக பிரிட்டனும், ஐரோப்பிய யூனியனும் தெரிவித்துள்ளன.

4. இந்தோ- பசிபிக் மண்டலத்தில் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியாவும் பிரிட்டனும் முடிவு செய்துள்ளன.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று லக்னோ மற்றும் ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன.

<<<<<>>>>>

மேற்குவங்க முதற்கட்ட மற்றும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தமிழகத்தில் நாளை வாக்குப்பதிவுக்கு தேவையான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், யாருக்கு வாக்களித்தோம் என்பதை காட்டும் VVPAT கருவிகள் உள்ளிட்டவை இன்று அந்தந்த வாக்குச்சாவடிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வாக்குச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்களும் ராண்டம் முறையில் தேர்வு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்குவங்க மாநில முதற்கட்ட தேர்தலை நாளை அமைதியாகவும், சுமுகமாகவும் நடத்துவதற்கான தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வாக்குச்சாவடிககளை சுற்றி எல்லைக்கோடு அமைக்கப்பட்டு இரண்டடுக்கு சரிபார்ப்புக்கு பின்னரே வாக்காளர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் வாக்குரிமை உள்ளவர்கள் இருப்பின் அவர்களுக்கு நாளை ஊதியத்துடன் கூடிய விடுப்பளிக்குமாறு புதுச்சேரி தலைமை தேர்தல் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

மேற்குவங்கத்தில் முதல் கட்டமாகவும் தமிழகத்திலும் நாளை சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

மேற்கு வங்க மாநிலத்தில் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு இம்மாதம் 29-ம் தேதி நடைபெறவுள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி வாக்காளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அமைப்புகளுக்கும் இது பொருந்தும் என்று அவர் கூறியுள்ளார்.

பணியமர்த்துபவர்கள் தங்கள் அமைப்புகளில் பணிபுரியும் அனைவரையும் வாக்களிக்க செய்ய வேண்டும் என்றும் இதற்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டிலும் மேற்கு வங்கத்திலும் வாக்குரிமை உள்ள மாணவர்கள் புதுச்சேரியில் உள்ள கல்வி நிறுவனங்களில் பயின்று வந்தால் அவர்களுக்கும் விடுமுறை அளித்து வாக்களிக்க செல்லுமாறு அறிவுறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜனநாயக அமைப்பில் அனைவரும் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்று புதுச்சேரி தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கான பங்களிப்பை அரசு ஊழியர்கள் வழங்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

அரசு ஊழியர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், பணியில் இருக்கும்போதும் புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டு செயல் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒருவார காலம் நடைபெற்ற கர்மயோகி திறன் மேம்பாட்டு பயிற்சி வாரத்தில் ஆர்வமுடன் கலந்து கொண்ட அனைத்து அரசு ஊழியர்களுக்கும் தமது பாராட்டுக்களை தெரிவிப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

நேர்மறையான ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கு கற்றல் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப புதிய நடைமுறைகள் மற்றும் உத்திகளை கற்றுக்கொண்டு ஊழியர்கள் தங்களது திறனை மேம்படுத்தி அரசுப்பணிகளின் தரத்தையும் உயர்த்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

பஹல்காம் கோரத்தாக்குதலின் முதலாம் ஆண்டு நிறைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இதேநாளில் பாகிஸ்தானில் இருந்து ஊடுருவிய தீவிரவாதிகள் பஹல்காமில் உள்ள பூங்காவில் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டதில் 26 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இந்த கொடூர தாக்குதலுக்கு உலகின் பல்வேறு நாடுகளும் கண்டனம் தெரிவித்தன.

அதுமட்டுமின்றி தீவிரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா சார்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கும் ஆதரவு தெரிவித்தன.

இதனையடுத்து இந்திய ராணுவத்தின் முப்படைகளும் நவீன உத்திகளை ஒன்றிணைத்து ஆபரேஷன் சிந்தூர் என்ற ராணுவ நடவடிக்கையை கடந்தாண்டு மே மாதம் 7-ம் தேதி பாகிஸ்தான் மீது நடத்தியது.

<<<<<>>>>>

நள்ளிரவில் நடத்தப்பட்ட இந்த துல்லிய தாக்குதலில் பாகிஸ்தான் மண்ணில் தீவிரவாதிகள் தங்கியிருந்த முகாம்கள் மற்றும் பதுங்கு குழிகள் உள்ளிட்டவை குறிவைத்து தாக்கி அழிக்கப்பட்டன.

இந்தியாவின் மிகச்சிறப்பான ராணுவ நடவடிக்கை ஒட்டுமொத்த உலகையும் வியப்பில் ஆழ்த்தியது.

பஹல்காம் தாக்குதலின் ஓராண்டு நிறைவையொட்டி ஐரோப்பிய யூனியன், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் இந்தியாவின் ராணுவ நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளன.

ஐரோப்பிய யூனியன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தீவிரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் அதனை வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் வெளியிட்டுள்ள செய்தியில், வன்முறைத் தாக்குதலில் இன்னுயிரை இழந்த அப்பாவி பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்து செயல்படும் லஷ்கர் இ தொய்பா என்ற அமைப்பு சுற்றுலாப் பயணிகள் மீது நடத்திய இந்த தாக்குதல் கோழைத்தனமானது என்றும் கூறியுள்ளது.

இந்த கொடூர சம்பவத்தை அடுத்து இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலில் பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதியில் தீவிரவாத கட்டமைப்புகள் தரைமட்டமாக்கப்பட்டதையும், சுட்டிக்காட்டியுள்ளது.

<<<<<>>>>>

இந்தோ- பசிபிக் மண்டலத்தில் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியாவும் பிரிட்டனும் முடிவு செய்துள்ளன.

பிரிட்டன் சென்றுள்ள இந்தியாவின் முப்படைகளின் தலைமைத் தளபதி திரு. அனில் சௌகான், பிரிட்டனின் தலைமைத் தளபதி Air Chief Marshal Sir Richard Knightol -உடன் ஆலோசனை நடத்தினார்.

இணையதள குற்றங்கள் உள்ளிட்ட உலகளாவிய சவால்களை உறுதியுடன் எதிர்கொள்வது குறித்தும் இந்தோ- பசிபிக் மண்டலத்தில் அமைதியை மேம்படுத்துவது குறித்து இரு நாட்டு ராணுவ அதிகாரிகளும் ஆலோசனை நடத்தினர்.

அங்குள்ள ராயல் ராணுவ பயிற்சி கல்லூரியில் மூத்த அதிகாரிகளிடையே உரையாற்றிய திரு. அனில் சௌகான், புதிய உத்திகளையும் நவீன தொழில் நுட்பத்தையும் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து பேசினார்.

பிரிட்டனின் பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிறுவனங்களின் தலைவர்களுடனும் அவர் ஆலோசனை நடத்தினார்.

தொழில் நுட்ப பகிர்வு மற்றும் வர்த்தகம் குறித்தும் அவர்களுடன் ஜெனரல் சௌகான் ஆலோசனை நடத்தினார்.

<<<<<>>>>>

இலங்கை தலைநகர் கொழும்பில் நடைபெறும் ஒருவார கால கூட்டு நீர்மூழ்கி பயிற்சியில் பங்குபெற இந்தியாவின் ஐ.என்.எஸ். Nireekshak கப்பல் சென்றுள்ளது.

நீர்மூழ்கி கப்பல்களை மீட்டெடுப்பது மற்றும் நீர்மூழ்கி வீரர்களைக் கொண்டு தாக்குதல்களை முறியடிப்பது ஆகிய முக்கியப் பணிகளை மேற்கொள்வதில் இந்திய கடற்படை கப்பல் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தப் பயிற்சி குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், இந்திய- இலங்கை கடல்சா◌ார் உறவுகள் மற்றும் பாதுகாப்பிற்கு இந்த கூட்டுப்படை பயிற்சி பெரிதும் உதவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாடுகளின் கடற்படையினரும் தங்களது தேர்ச்சி பெற்ற திறமைகளை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பாகவும் இந்த பயிற்சி அமைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் மனிதாபிமான நடவடிக்கையாக இந்த கப்பல் மூலம் இலங்கையில் இரண்டு மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படைக்கு 50 ஆயிரம் சுற்று குண்டுகளையும் இந்தியா வழங்கவுள்ளது.

இந்தியாவின் மகாசாஹர் முன்னோடித் திட்டத்தின் கீழ் இந்தியப் பெருங்கடல் மண்டலத்தில் பாதுகாப்புக்கான ஒத்துழைப்பை வலுப்படுத்துவற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று லக்னோ மற்றும் ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன.

லக்னோவில் சற்று நேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

<<<<<>>>>>

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா இன்று இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 25 மீட்டர் பிரிவில் Sejal Kamble வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 25 மீட்டர் பிரிவில் Raj Chandra வெள்ளிப்பதக்கத்தையும், அபினவ் தேஷ்வால் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், 4 வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்று, பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

<<<<<>>>>>

ஜப்பானில் நடைபெற்று வரும் பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா ஆடவர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<>>>>>

டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் மகளிர் ஜூனியர் பிரிவில் இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் 29-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

<<<<<>>>>>

இந்தியா - தென்னாப்பிரிக்கா இடையேயான 3வது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று ஜோஹன்னஸ்பர்க்கில் நடைபெறுகிறது.

5 போட்டிகளை கொண்ட இந்த தொடரில் தென்னாப்பிரிக்கா முதல் 2 ஆட்டங்களில் வெற்றிபெற்று, முன்னிலை பெற்றுள்ளது.

<<<<<>>>>>

தெற்காசிய மகளிர் கால்பந்து போட்டிக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டி கோவாவில் அடுத்த மாதம் 2 5 -ஆம் தேதி தொடங்கி, ஜூன் மாதம் 6 -ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

<<<<<>>>>>

தேசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் தமிழகம் பட்டம் வென்றது.

<<<<<E N D >>>>>